மருந்து எடுக்கும்போது வழக்கத்திற்கு மாறான வேறு பக்க-விளைவுகள் ஏதேனும் ஏற்பட்டால், மருத்துவரிடம் தெரிவியுங்கள்.

## நான் எடுக்க வேண்டிய **முன்னெச்சரிக்கைகள்** யாவை?

இந்த மருந்தை எடுப்பதற்கு முன்னால்,

- எந்த மருந்தாவது உங்களுக்கு ஒவ்வாமை ஏற்படுத்துமா என்பதை மருத்துவர் அல்லது மருந்தாளரிடம் தெரிவியுங்கள்.
- தற்போது நீங்கள் சாப்பிடும் மருந்துகளை மருத்துவர் அல்லது மருந்தாளரிடம் தெரிவியுங்கள். குறிப்பாக, மனஅழுத்தம், வலிப்பு, சளி மருந்துகள், தசை தளர்த்திகள், அமைதிப்படுத்தும் மருந்துகள், துக்க மாத்திரைகள்.
- மருத்துவப் பிரச்னை இருந்தால் மருத்துவரிடம் தெரிவியுங்கள். குறிப்பாக, ஆஸ்துமா, நுரையீரல் நோய்கள், சிறுநீர் கழிப்பதில் சிரமம், வலிப்பு, இரத்தக் கொதிப்பு மற்றும் இருதய அல்லது கல்லீரல் நோய்கள்.
- நீங்கள் கர்ப்பமாக இருந்தால், கர்ப்பம் தரிக்க நினைத்திருந்தால், அல்லது தாய்ப்பால் கொடுத்து வந்தால், அதை மருத்துவரிடம் தெரிவியுங்கள்.
- இந்த மருந்து எடுக்கும்போது மது அருந்தாதீர்கள்.
- இந்த மருந்து சிலருக்கு அதிக துக்கத்தையும் மந்த நிலையையும் உண்டாக்கும். உங்களுக்கு எப்படி என்பதை முதலில் தெரிந்து கொள்ளுங்கள். விழிப்பு நிலையில் இல்லாதபோது வாகனம் ஓட்டுதல், இயந்திரம் இயக்குதல் போன்ற வேலைகளைச் செய்வது ஆபத்தில் முடியலாம்.

## மருந்தை நான் எப்படி **வைத்திருக்க** வேண்டும்?

மருந்தை காற்று புகாத டப்பாவில் வைத்திருங்கள். அதன்மீது வெப்பமோ சூரிய ஒளியோ படாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

Ministry of Health
National Healthcare Group
SingHealth



# நோயாளி தகவல் கையேடு



# 'வறட்டு' இருமல் சிகிச்சைக்கான மருந்துகள்

டை∴பென்ஹைட்ரமைன் • டெக்ஸ்ட்ரோமெதார்∴பன் • குளோபுடினால் • ப்ரோமெதசைன் மற்றும் கோடீன் • ∴போல்கோடீன் • ட்ரைபொலிடீன் •

## Medicine To Treat 'Dry' Coughs

Diphenhydramine • Dextromethorphan • Clobutinol • Promethazine and Codeine • Pholcodine • Tripolidine

T45R0

## உங்கள் மருந்து பற்றிய தகவல்

ப்ரோமெதசைன் (Promethazine). ட்ரைபொலிடீன் (Tripolidine) என்பன ஹிஸ்டமின் எதிர்ப்பிகள். இவை சளியைக் கெட்டியாக்கி, இருமலைக் குறைக்கின்றன. கோழை உற்பத்தியைக் குறைத்து, நுரையீரலின் காற்றுவழிகளைத் திறந்துவிடுகின்றன. மேற்கூறிய ஹிஸ்டமின் எதிர்ப்பிகளைக் கொண்டிருக்கும் தயாரிப்புகளுக்கு எடுத்துக்காட்டாக, ஆக்டி∴பெட் (Actifed), ப்ரொகோடின் (Procodin) தாசெடில் (Dhasedyl) ஆகிய மருந்துகளைக் குறிப்பிடலாம்.

கோடீன் (Codeine), ∴போல்கோடீன் (pholcodine), டெக்ஸ்ட்ரோமெதார்∴பன் (dextromethorphan) மற்றும் குளோபுடினால் (clobutinol) ஆகியவை இருமலைப் போக்கவும், அடிக்கடி இருமல் வருவதைக் குறைக்கவும் பயன்படுகின்றன. இந்த இருமல் அடக்கிகளைக் கொண்டிருக்கும் தயாரிப்புகளுக்கு எடுத்துக்காட்டாக, ஆக்டி∴பெட் டிஎம் ( Actifed DM ), டியூரோ-டஸ் (Duro-Tuss), ப்ரொகோடீன் (Procodin), தாசெடில் (Dhasedyl), டஸ்ஸில்ஸ் (Tussils) மற்றும் சைலோமாட் (Silomat) ஆகிய மருந்துகளைக் குறிப்பிடலாம்.

## மருந்தை நான் எப்படி உட்கொள்ள வேண்டும்?

மருத்துவர் கூறியபடி மருந்தை உட்கொள்ள வேண்டும். மருந்தைச் சரியான முறையில் எடுக்கத் தெரியாவிட்டால் மருந்தாளரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்.

மருத்துவர் தண்ணீரைக் குறைக்கச் சொன்னாலன்றி, இந்த மருந்து சாப்பிடும்போது தண்ணீர் நிறைய அருந்துங்கள்.

மருந்து எடுத்த 7 நாட்களுக்குள் இருமல் குறையவில்லை என்றாலோ, அல்லது காய்ச்சல், தோல் தடிப்புகள், இடைவிடாத தலைவலி ஏற்பட்டாலோ, மருத்துவரைப் பாருங்கள்.



நோயாளி தகவல் கையேடு । 'வறட்டு' இருமல் சிகிச்சைக்கான மருந்துகள

## மருந்து உட்கொள்ள நான் மறந்துவிட்டால் என்ன செய்வது?

ஒரு வேளைக்குரிய மருந்தை எடுக்கத் தவறிவிட்டால், ஞாபகம் வந்த உடனேயே உட்கொள்ளுங்கள். எனினும், அப்போது அடுத்த வேளைக்கான நேரம் நெருங்கிவிட்டால், எடுக்கத் தவறிய மருந்தை விட்டுவிட்டு, அடுத்த வேளையிலிருந்து வழக்கம்போல் தொடருங்கள். முதல் வேளையில் எடுக்கத் தவறிவிட்டோமே என்று அடுத்த வேளையில் இரண்டு மடங்கு உட்கொள்ளாதீர்கள்.

## இம்மருந்துகள் ஏற்படுத்தக்கூடிய பக்க-விளைவுகள் யாவை?

பக்க-விளைவுகள் அரிது என்றாலும், அவை ஏற்படக்கூடிய சாத்தியமும் உள்ளது. கீழ்க்காணும் பக்க-விளைவுகள் கடுமையாகவும், நீங்காமலும் இருந்தால் மருத்துவரிடம் ஆலோசனை பெறுங்கள்.

| மருந்து | பக்க-விளைவுகள் |
|---|---|
| ப்ரோமெதசைன்<br>ட்ரைபொலிடீன் | வாய், மூக்கு, தொண்டை உலர்தல்<br>தூக்கம் வருதல்<br>வயிறு கெடுதல்<br>தலைவலி<br>பார்வை மங்குதல்<br>சிறுநீர் கழிப்பதில் சிரமம் |
| டெக்ஸ்ட்ரோமெதார்∴பன்<br>∴போல்கோடீன்<br>கோடீன்<br>குளோபுடினால் | தலைச் சுற்றல்<br>தூக்கம் வருதல்<br>குமட்டல் அல்லது வாந்தி<br>வயிறு கெடுதல்<br>மலச்சிக்கல் |